Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.206/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW3** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | செல்வி |
| Father/Husband Name | : | பிச்சை |
| Village | : | தட்டான்தோப்பு |
| Taluk | : | கீழக்கரை |
| Calling | : | ஓட்டலில் வேலை |
| Religion | : | |
| Age | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் கீழக்கரை தட்டான்தோப்பில் வசித்து வருகிறேன். நான் கீழக்கரையில் உள்ள ஒரு ஓட்டலில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1, 2 சாட்சிகளான தலைமை காவலர் கார்வண்ணன், முதல்நிலை காவலர் தினகரனை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியாது. எனது மகன் சஞ்சய்நாதன் குடித்து கொண்டு வந்ததால் கீழக்கரை ஆய்வாளர் அவர்கள் ஏம்மா இப்படி குடித்து வருகிறான். கண்டிக்க மாட்டீர்களா என்று கேட்டார். என் மகனுக்கு தற்போது 20 வயதாகிறது.

ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது என் மகனுக்கு 17 வயதானது. வேறு எதுவும் எனக்கு தெரியாது.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

போலிஸ் விசாரணையில் எனது மகன் சஞ்சய்நாதன் சிறு வயது முதலே பள்ளிக்கு செல்ல மாட்டான் என்றும் அவன் ஆஜர் எதிரியிடம் தடைசெய்யப்பட்ட புகையிலையை அதிக விலைக்கு வாங்கி பயன்படுத்தி வந்தான் என்றும் அதை கேள்விப்பட்ட நான் ஆஜர் எதிரியிடம் புகையிலை பொருட்களை கொடுக்க வேண்டாம் என்று சண்டையிட்டேன் என்றும் எனது மகன் சஞ்சய்நாதனை நாமக்கல் மாவட்டத்தில் வேலைக்கு சேர்த்து விட்டேன் என்றும் என்று சொல்லிவிட்டு ஆஜர் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 206/2025** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW2** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | தினகரன் |
| Father/Husband Name | : | பஞ்சவர்ணம் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:-**

நான் தற்போது திருஉத்திரகோசமங்கை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.03.2022ம் தேதி இரவு 9.00 மணிக்கு கீழக்கரை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்த போது மேற்படி காவல் நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் சுரேஷ்க்கு கிடைத்த தகவலின் பேரில் அளவாய்கரைவாடி – காஞ்சிரங்குடி செல்லும் வழியில் காமாட்சி தோப்பிற்கு அருகில் இரவு 9.00 மணியளவில் வாகன தணிக்கை செய்தோம். அப்போது காஞ்சிரங்கு –

கீழக்கரை நோக்கி TN 06 B 6178 என்ற வெள்ளை நிற மாருதி ஆம்னி கார் வந்தது. அதை நிறுத்தி சோதனை செய்தபோது பின்சீட்டில் 24 பண்டல்கள் கணேஷ் புகையிலை மற்றும் 100 பண்டலில் 20 கட்டுக்கள் வீதம் செய்யது பீடி இருந்தது. அது அரசால் தடைச்செய்யப்பட்ட புகையிலை என்பதால் வாகன ஓட்டுநரை விசாரித்தபோது அவர் அளவாய்கரைவாடியை சேர்ந்த இராமசாமி மகன் வெங்கடேஷ் என கூறினார். அவரை சிறப்பு சார்பு ஆய்வாளர் சுரேஷ் தக்க காரணம் காட்டி கைது செய்து 9.15 மணியளவில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் தலைமை காவலர் கார்வண்ணனும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்து **அ.சா.ஆ.3.** TN 06 B 6178 என்ற வெள்ளை நிற மாருதி ஆம்னி காரையும் 24 பண்டல்கள் கணேஷ் புகையிலையையும், 100 பண்டலில் 20 கட்டுக்கள் வீதம் செய்யது பீடியையும் அத்தாட்சி தயார் செய்து சிறப்பு சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் தலைமை காவலரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது தான். அது அரசால் தடைச்செய்யப்பட்ட பொருள் என்பதால் ரசாயன பகுப்பாய்வுக்காக 2 பொட்டலங்களை பாலித்தீன் கவரில் மடித்து காக்கி நூல் கட்டி சார்பு ஆய்வாளர் சீல் வைத்து 29.03.2022 இரவு 23.00 மணிக்கு கைப்பற்றிய சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் கொண்டு வந்து நிலையம் பாரா வசம் ஒப்படைக்க சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | } | | |
| Miscellaneous | .. .. | } | | |
| Preliminary Register | .. .. | } | **S.C.206/2025** | |
| Sessions | .. .. | } | | |
| | | } | Prosecution | – **PW1** |
| Deposition of witness for | | } | Defence | – |
| | | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | கார்வண்ணன் |
| Father/Husband Name | : | இராமசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது உச்சிப்புளி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 23.09.2022 அன்று இரவு 8.00 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் சுரேஷ் அவர்களுக்கு கிடைத்த தகவலின்பேரில் நானும் என்னுடன் முதல் நிலை காவலர் 2064 தினகரனும் காஞ்சிரங்குடியிலிருந்து அளவாய்கரைவாடி ரோட்டில் காமாட்சி தோப்பு அருகே வாகன தணிக்கை செய்தோம். அப்போது TN 06 B 6178 என்ற white Colour Omni Car வந்தது . அதை நிறுத்தி சோதனை செய்தோம். அதன்

பின்சீட்டில் 24 பண்டல்கள் கணேஷ் 701 டொபாக்கா Premium புகையிலை ஒவ்வொரு பண்டல்களிலும் 15 பாக்கெட்டுக்கள் வீதம் இருந்தது. 100 பண்டல்கள் செய்யது பீடி ஒவ்வொரு பண்டல்களிலும் 20 கட்டுக்கள் வீதம் இருந்தது. அந்த வாகனத்தை ஓட்டி வந்தவரை விசாரித்த போது அவர் அளவாய்கரைவாடியை சேர்ந்த இராமநாதன் மகன் வெங்கடேசன் என்று கூறினார். அவரை விசாரித்த போது மேற்படி வெங்கடேஷ் அவருடைய ஊரில் RS Snacks என்ற பெயரில் முறுக்கு மற்றும் மிக்சர் தயாரித்து கடைகளுக்கு விற்பனை செய்து வருவதாகவும் அதோடு சேர்த்து புகையிலை மற்றும் பிடிகளை கடைகளுக்கு போடுவதாகவும் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு விற்று வருவதாகவும் சொன்னார். 09.15 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் சுரேஷ் எதிரியை கைது செய்து தனிநபர் சாட்சிகள் அங்கு இல்லை என்பதால் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடன் வந்த முதல்நிலை காவலர் தினகரனும் கையொப்பம் செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.1.** பின்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் சுரேஷ் இரவு 10.45 மணியளவில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட 24 பண்டல்கள் கொண்ட கணேஷ் 701 டொபாக்கா Premium புகையிலை மற்றும் 100 பண்டல்கள் செய்யது பீடி மற்றும் மாருதி Omni Car ஆகியவற்றை அத்தாட்சி தயார் செய்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் முதல் நிலை காவலர் தினகரனும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1ம் கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ. 2.** அந்த புகையிலை மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடியதான என்பதை உறுதிப்படுத்துவதற்கு 2 புகையிலை பொட்டலங்கள் எடுத்து சீல் வைத்து எதிரியுடன் மேற்படி சொத்துக்களையும் நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைக்க சிறப்பு சார்பு ஆய்வாளருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.